# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,664 — 1959 පෙබරවාරි 13 වැනි සිකුරාදා — 13.2.1959**

11,664 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

1/23/6/3 (ஜீ).

1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடத்தப்பட்ட மத்திய எழுது வினைஞர் பரீட்சையில் கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் சுங்க எழுது வினைஞர் சேவையின் பொது வகுப்பில் நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

| பெயர் | | விலாசம் |
|---|---|---|
| அபயரெத்ன, ஐ. கி. | .. | 11/714, புகையிரத தொழிற்சாலை, சி. எம். ஈ. ரத்மலானை |
| இராசரெத்தினம், க. | .. | தமிழ்க் கிளை, வித்தியா பகுதி, கொழும்பு |
| உப்பசிறி, எ. | .. | "சாம் ரெக்", 82/1, காலி வீதி; கல்கிசை |
| எதிரிசிங்க, கு. டொ. ஹெ. | .. | டெடிகம, நெலுண்டேனிய தபாற் கந்தோர் |
| சடாச்சரம், ஆ. ஸ்ரீ. | .. | நீர்ப்பாசன இலாகா, செக்கறற்றேரியட், கொழும்பு |
| சிறிசேன, ம. தொ. | .. | அ/மகாகஸ்வீவ, அரசாங்க பாடசாலை, கலேன்பிண்டுனுவீவ |
| சில்வா, ஆ. ரு. சி. | .. | 226, கொறகொல்லை, கணேமுல்லை |
| செனிவரத்தின, சி. | .. | 115, பெப்பிலியான, பொறலஸ்கமுவ |
| டீ சில்வா, பே. க. | .. | "வாலிங்ரன்", ஜெயரத்ன றோட், நீர்கொழும்பு |
| தர்மசேன, சு. தெ. | .. | முடுங்கொடை, கம்பஹா, (மே. மா.) |
| திசேரு, கெ. ரெ. | .. | சேனபுர பாடசாலை, சேனபுர |
| நடராஜா, வீ. | .. | சுங்க இலாகா, கொழும்பு |
| பரஞ்சோதி, ந. | .. | கரந்தன், நீர்வேலி |
| பாலசூரிய, மா. அ. இ. | .. | 97, தெமட்டக்கொடை வீதி, மருதானை, கொழும்பு |
| பியதாச, லே. | .. | ஆகாய அளவைப் பகுதி, அளவைக் கந்தோர், கிருள றோட், கொழும்பு 5 |
| பெரேரா, கெ, டெ. ஜே. ஜெ. | .. | கலமுள்ள, களுத்துறை |
| பெரேரா, கெ. தொ. த. | .. | நீர்ப்பாசனப் பகுதி, தெசமாரும |
| பெரேரா, நெ. ஆ. | .. | 8/1, பின்தாலியா ஒழுங்கை, கல்கிசை |
| பெரேரா, வெ. ஆ. அ. | .. | 32, அங்கொடை றோட், வெல்லம்பிட்டியா |
| பெரேரா, ஜ. ஆ. உ. | .. | ஜயபிம, மாலமுல்ல மேற்கு, பாணந்துறை |
| மெடிஸ், வ. வ. கி. கி. | .. | 69, சேர்குலர் றோட், இடாம, மொறட்டுவ |
| வடிவேலு, சி. | .. | வதிரிராயன் வடக்கு, செம்பியன் பற்று, பளை |
| விக்கிரமசிங்க, டொ. அ. | .. | "விக்கிரமகிரி", தெமழதுாவ, பிலியந்தல |
| விஜயவர்தன, கொ. | .. | கல்பதா, ரூவான்வெல |
| ஜினனந்தசிறி, கா. ம. க. | .. | சுங்க இலாகா, கொழும்பு |

2. எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்குப் பரீட்சார்த்தமானவையாக இருக்கும். நியமனம் பெறுவோர்கள் வைத்தியப் பரிசோதனைக்கும், சுங்க எழுது வினைஞர் சேவையைச் சேர்ந்த நிபந்தனைகளுக்கும் உள்ளாவர்.

3. பிரதான சுங்கச் சேகரிப்பாளர் பரீட்சார்த்திகளுடன் நேரிற் தொடர்பு வைப்பார்.

எச். ஈ. பீரிஸ்,
திறைசேரிப் பிரதிக் காரியதரிசி.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1959 ம் ஞூ பெப்ருவரி மீ 7 ந் வ.

இல. 1/23/6/3 (ஜீ).

1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடைபெற்ற மத்திய எழுது வினைஞர் பரீட்சை முடிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பின்வருபவர்கள் புகையிரத எழுதுவினைஞர் சேவையின் பொது வகுப்பில் எழுதுவினைஞராக நியமிக்ககப்பட்டுள்ளனர் :—

| பெயர் | | விலாசம் |
|---|---|---|
| ஆரியதாச, எம். வ. டீ. | .. | மத்தெகம, மீககதென்னை |
| உடசரி, எஸ். | .. | பீக்வெல்லை, மாத்தறை |
| குனபால, பி. எச். | .. | அறவாவில, வட்டுகெதர |
| குமாரராசா, ஜீ | .. | 6, புதுத் தெரு, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் |
| சியபால, டப்ளியூ. வ. | .. | விஜயானந்த அவெனியூ, பட்டதுவ, காலி |
| சின்னத்துரை, எஸ். | .. | புகையிரத வீதிப் பண்டசாலைப் பகுதி, பயணக்காலை, தெமட்டகொடை |
| நாநாயக்கார, வ. டீ. | .. | "ரெக் வீயூ எஸ்டெட்", கொகில கெதற, குருனகல் |
| பெர்னண்டோ, எம். சிரிவர்தன | | குடாவெவ, வடமேல் மாகாணம் |

2. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனால் இடங்கள் காலியாக வரும் பொழுது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்கு பரீட்சார்த்தமானவையாக இருக்கும். இவர்கள் ஓர் வைத்தியப் பரிசோதனைக்கும் புகையிரத எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த நிபந்தனைகளுக்கும் உள்ளாவர்.

3. புகையிரதத் தலைமை அதிபர் இப்பரீட்சார்த்திகளுடன் நேரிற் தொடர்பு வைப்பர்.

எச். ஈ. பீரிஸ்,
பொதுத் திறைசேரி, கொழும்பு, திறைசேரிப் பிரதிக் காரியதரிசி.
1959 ம் ஞூ பெப்ருவரி மீ 9 ந் வ.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா—கேள்வி நொத்திரீஸ்

வட பகுதி வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இஞ்ஜினியரால் மாமடுங் குளக் கட்டிற்கு கீழ்க்காணும் வேலைகளுக்காகிய விண்ணப்பப் பத்திரங்கள் 24.2.59, செவ்வாய்க்கிழமை, காலை 9 மணி 30 நிமிடம் வரையும் நீர்ப்பாசன இலாகாவில் முறையே ரூபாய் 15,000 த்திற்கு மதற்கு மேற்பட்ட தொகைக்கும் ரூபாய் 40,000 த்திற்கு மதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) கீழ்ப்புறம் குளக்கட்டிற்கு மணல் கற்களால் வடிகட்டு வேலை செய்தல் ;

(2) மேல் புறம் குளக்கட்டிற்கு அலைகற்கள் குறிக்கப்பட்ட இடங்கட்கு போடுதல்.

2. விண்ணப்பப் பத்திரங்கள் 23.2.59 வரையும் வவுனியா பகுதி நீர்ப்பாசன இஞ்ஜினியரின் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மற்று ஏனைய விபரங்கட்கு மேற்படி காரியாலயத்திற்கு நேர்முகமாகவோ, மனுச் செய்தோ கோரவும்.

3. தற்சமயம் அரசாங்க ஒப்பந்தங்கள் கைவச மிருப்பின் சம்புந்தப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து அவ்வேலைகள் திருப்திகரமாக செய்யப்படுகிறதென்று அத்துடன் வேலைகளின் பெயரும் தொகையுங் குறிக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் மேற் கூறிய வேலைகட்கு விண்ணப்பிக்கும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும். இன்னும் அத்தாட்சிப் பத்திரங்களில் குறிப்பிடாத வேலைகளெதுவும் கைவசமில்லையென்று அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

வி. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன இஞ்ஜினியர்,
வவுனியாப் பகுதி.

1959 ம் ஞூ பெப்ரவரி மீ 2 ந் வ.

## நீர்ப்பாசன இலாகா

மேற் பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர், கொட்டா தெரு, கொழும்பு 8 ல் இருக்கும் தமது காரியாலயத்தில் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 10 ந் திகதிவரை சப்பரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த இரத்தினபுரிப் பகுதியிலுள்ள பல்லெவெத்தையிலுள்ள வெள்ளாவைத் திட்டத்தில் பராமரிப்பு பழுது வேலைபார்ப்பதற்கு ரெண்டர்கள் பெற்றுக்கொள்வார்..

இரத்தினபுரி சிறு பகுதி நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெறக்கூடிய ரெண்டர் பத்திரங்களில் இரு பிரதிகளில் சீலிடப்பட்ட கடித மூலம் ரெண்டர்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்கள் யாவும் மேற் கூறிய காரியாலயத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் 8,000 ரூபாய்க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டவரென அத்தாட்சிப்படுத்தும் கொந்தராத்துக்காரருக்கு, 25 ரூபாய் கச்சேரியில் கட்டி ரசீது பெற்றுச் சமர்ப்பிப்பவர்கட்கு 16.2.59 தொடக்கம் 6.3.59 வரை ரெண்டர் பத்திரங்கள் வழங்கப்படும்.

அரசாங்கத்தில் தற்பொழுது கொந்திராத்து வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகஸ்தர்களிடமிருந்து, வேலை நன்முறையில் நடைபெறுகிறதற்கு அத்தாட்சியாக நற்சாட்சிப்பத்திரங்கள், ரெண்டர் பத்திரங்களைக்கு மனுச்செய்யும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கம் யாதொரு கேள்வியுமின்றி முழு ரெண்டரையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுப்பதற்கோ சகல உரிமையும் உடையதென உறுதிப்படுத்தப்படுகிறது.

நீர்ப்பாசன எஞ்சினியர்,
இரத்தினபுரி சிறுபகுதி.

## வித்தியா பகுதி

### பொது விஞ்ஞான உபகரண அடுக்குகள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள்—1958/59

பொது விஞ்ஞான உபகரண அடுக்குகள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை, 1959 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 17ந் திகதி, மு.ப. 10.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி மந்திரி காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் "வித்தியாதிபதி (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரில் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 16 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். டி. எஸ். கருணரத்தின,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஆண்டு பெப்ருவரி மீ 9ந் உ.

## தபால் தந்திப் பகுதி

### ஆண்களுக்கான 100 மிதிவண்டிகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

குறிப்பிட்ட நியமங்களுக்கிணங்க 100 மிதி வண்டிகளை விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள், 1959ம் ஆண்டு பங்குனி மாதம் 17 ந் திகதி மு. ப. 9.30 மணிவரை, கொழும்பு செயலாளகம், தபால் ஒலிபரப்பு தகவல் அமைச்சுக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால், உற்பத்தியாளரிடமிருந்தும் உற்பத்தியாளர்களின் அதிகாரம் பெற்ற விநியோகத்தர்களிடமிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். இவ்வலுவலைக் குறித்து எல்லா விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்திக காசாளரிடம் கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக 100 ரூபா கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 16 ந் திகதி நண்பகல் வரை வழங்கப்படும்.

4. ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக உறுதியின் மூலம் தேவையான பிணை கொடுத்தல் வேண்டும். தேவையான பிணைத் தொகை கேள்விப்பத்திர மதிப்பின் 5 வீதமாகும். ஒப்பந்தஞ் செய்யும்போது, உடன்படிக்கையில் தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரகாரர் முத்திரைச் சட்டப்படி முத்திரை ஒட்டக் கடமைப்பட்டவராவர்.

5. 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 17 ந் திகதி மு. ப. 10 மணிக்கு தபால் ஒலிபரப்பு தகவல் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது, கேள்விப்பத்திரங்களை அனுப்பியவர்கள் சமூகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு.
1959 ம் ஆண்டு பெப்ருவரி மீ 10 ந் உ.

## கடற்றொழிற் பகுதி

### யாழ்ப்பாண மாவட்டத்தில் பாசையூரில் 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 25 மலசலகூடங்களையும் கிணறுகளையும் நிர்மாணித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாசையூரில் 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 25 மலசலகூடங்களையும் 2 கிணறுகளையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு—1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரையுமேற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு—3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000 கும் அதற்குமேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9 ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு—3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100 வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது இத்தொகைக்காய் பற்றுச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. ஏ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு; பெப்ருவரி 9, 1959.

## பொருட்கள் ஏலவிற்பனை

### விளம்பரம்

1959 ம் ஆண்டு "பெப்ருவரி" மாதம் 23ந் திகதி திங்கட்கிழமை பகல் ஒரு மணியளவில் புகையிரத பண்டசாலையில் மரப்பெட்டிகள், காலியான இரும்புப் பீப்பாக்கள் தகரங்கள் முதலியவைகள் ஏலத்தில் விற்கப்படும்.

விற்கப்பட்ட சாமான்களை மூன்று நாட்களுக்குள் எடுக்காவிட்டால் நாளொன்றுக்கு வாடகை 50 சத விகிதம் அறவிடப்படும்.

சி. சபாரத்தினம்,
அத்தியட்சர்,
புகையிரத பண்டசாலைப் பகுதி.

கொழும்பு,
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 7 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.